DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.418/17

Deposition of Witness: PW 4

| | |
|---|---|
| Name பாண்டி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் அல்லிநகரத்தில் குடியிருந்து முத்தூட்டி வங்கியில் காவலளராக வேலை செய்து வருகிறேன். பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 22.8.16ம் தேதி மாலை 5.00மணிக்கு மார்கெட் சென்று காய்கறி வாங்கிவிட்டு திரும்பும் போது சங்கீதா வீட்டின் அருகே அல்லிநகரம் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்துக்கொண்டிருந்தார்கள் அதில் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டதற்காக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். அதில் நானும் துரைபாண்டியன் என்பவரும் கையெழுத்து செய்தோம். பார்வைமகஜர் அசாஆ.2. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சம்பவம் பற்றி எனக்கு நேரில் எதுவும் தெரியாது. சம்பவ இடம் வழியாக நான் தினசரி நடைபயிற்சி செய்வேன். ஆய்வாளர் வரைந்த வரைபடத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வெள்ளைப்பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. புகார்தாரர் மற்றும் எதிரிகளை எனக்கு தெரியும். அன்றைய தினம் ஐயப்பன் என்பவர் கடைக்கு நான் காய்கறி வாங்குவதற்காக சென்றேன். ஐயப்பன் அந்த இடத்தில் நீண்டகாலமாக கடை வைத்து நடத்தி வருகிறார். படிகட்டு இடிந்துகிடந்ததை நான் பார்த்தேன். காவல்துறையினர் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் போகும் போது சம்பவ இடத்தில் கூட்டமாக இருந்தது. கூட்டத்தில் 20நபர்கள் இருந்தார்களா என்றால் குறைவாக தான் இருந்தார். சம்பவ இடம் அருகில் உள்ள ஜெயலட்சுமி, முத்துமணி ஆகியோரின் பலசரக்கு கடை உள்ளது என்றால் சரிதான். ஜெயலட்சுமி கடையை எனக்கு தெரியாது. முத்துமணி பலசரக்கு கடையை தெரியும். அது சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது. தசரதன் அரிசி கடை கிழக்கு பக்கம் தான் உள்ளது. கீரை மார்க்கெட் என்று தனியாக உள்ளது. அது ஆரம்ப காலம் முதல் இருக்கிறது. புகார்தாரருக்கு ஆதரவாக நான் இல்லாத இடத்தில் இருந்ததாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.